## ஊடுபயிரில் உன்னத வருமானம்…!

## 25.04.2013

**வழிகாட்டிய ஆட்சியர்… வளம்பெற்ற விவசாயிகள்..**



தண்ணியில்லாத காட்டுக்கு மாற்றிடுவோம்.. அதிகார வர்க்கங்களுக்கு வளைந்து கொடுக்காத அதிகாரிகள் அடிக்கடி எதிர்கொள்ளும் வார்த்தை இது. அப்படி அடிபணியாத அதிகாரிகளுக்கான 'தண்ணியில்லாத காடு' களில் ஒன்று.. ராமநாதபுரம் மாவட்டம், வறட்சிக்கான காரணங்களில் ஒன்றான கருவேலமரங்களே, அந்த மக்களுக்கு வாழ்வாதராமாகியிருப்பது காலத்தின் கோலம். தற்போது நிலவும் வறட்சியில் செழிப்பான தஞ்சைத் தரணியே தண்ணீருக்கு தாளம் போட்டுக் கொண்டிருக்கும் நிலையில், வறண்ட மாவட்டமான ராமநாதபுரம் பகுதி விவசாயிகளின் நிலை எப்படி இருக்கும் என்பதை வார்த்தைகளில் சொல்ல இயலாது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் கூட, விவசாயிகளை முன்னேற்றும் வகையில்… குறைந்த நாட்களில் வருமானம் எடுக்கும் தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்குச் சொல்லிக் கொடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது, ராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம். முதல் கட்டமாக நயினார் கோவில், போகலூர் வட்டாரங்களில் 'அட்மா' (வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை) என்கிற அரசுத் திட்டத்தின் கீழ் .. இருக்கின்ற நீராதாரங்களை வைத்து, ஒரே சமயத்தில் பல பயிர்களை சாகுபடி செய்யும் ஊடுபயிர் முறைகளையும், குறைவான நீரில் காய்கறிகளை பயிர் செய்யும் தொழில்நுட்பங்களையும் விவசாயிகளுக்குக் கற்றுக் கொடுத்து வருகிறார்கள். இதைப்பற்றி கேள்விப்பட்டு, நயினார்கோவில் ஒன்றியத்தை வலம் வந்தபோது, நாம் கண்ட காட்சிகளும்.. காதில் வந்து சேர்ந்த விஷயங்களும் நம்பிக்கை ஊட்டுவனவாக இருந்தன!

ஊடுபயிருக்கு தனி பராமரிப்பு இல்லை!

பாண்டியூரில் வாழைக்கு ஊடுபயிராக விதைத்திரந்த வெங்காயத்தை அறுவடை செய்து கொண்டிருந்த கோமதி நாதன், "மொத்தம் எட்டு ஏக்கர் நிலமிருக்கு. இது கணிமணல் நிலம். வழக்கமாக வாழையை நட்டுவிட்டு, பத்து மாதத்திற்குப் பிறகுதான் வரும்படி எடுப்போம்.

இந்த தடவை அதிகாரிகள் வந்து வாழையோடு ஊடுபயிராக வெங்காயம், உளுந்து, அவரையை நட்டால்... கூடுதலாக வருமானம் கிடைக்கும் என்று சொன்னாங்க. அது எந்தளவுக்க தோதுபடும் என்று சந்தேகமாக இருந்தது. இருந்தாலும், அதிகாரிகள் நம்மளை தேடி வந்து சொல்றாங்க. அதுவும் விதைகளையும் இலவசமாக கொடுக்கிறார்கள். செய்து பார்த்துவிடுவோம் என்றுதான், முக்கா குறுக்கத்தில் (75 சென்ட்) சக்கை வாழையை நட்டு, அதுக்கு இடையில் அரை குறுக்கத்தில் (50 சென்ட்) ஊடுபயிராக உளுந்தை மட்டும் விதைத்தேன். மீதமிருந்த கால் குறுக்கத்தில் வெங்காயம், உளுந்து, அவரை மூன்றையும் கலந்து விதைத்தேன். வாழைக்கு செய்த பண்டுதத்திலேயே மற்ற பயிருகளும் வந்துவிடும். ஊடுபயிருக்காக தனியாக எந்த பராமரிப்பும் செய்ய வேண்டாம். வாழைக்கு இடையில் பயிருங்க நெருக்கமாக இருந்தால் களை எடுக்கும் செலவும் இல்லாமல் போய்விட்டது என்றார். செடியின் கருணையால் செடியில் கூடுதல் மகசூல்! பாண்டியூரிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது, சுரைக்கோட்டை இங்கு மிளகாய், வெண்டை, கத்திரி ஆகியவைதான் பிரதான பயிர்கள். கொடிவகை காய்கறிகளை இப்பகுதியில் அறிமுகப்படுத்தியுள்ளது. தோட்டக்கலைத்துறை. இக்கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணி- லதா தம்பதி... வழக்கமாக கத்தரிதான் அதிகமாக நடுவோம். கொஞ்ச இடத்தில் வெண்டியும் போடுவோம். அதிகாரிங்க தேடி வந்து, ஊடுபயிர் பற்றி சொன்னாங்க. காய்கறி பயிர் அளவுக்கு கொடிப் பயிர்களுக்கு அதிக தண்ணீர் தேவைப்படாது. நீங்க, நிலம் முழுக்கக்கூட நட வேண்டாம். வரப்பு வாய்க்காலில் நட்டு பாருங்க. திருப்தியாக இருந்தால், அடுத்த முறை அதிக இடத்தில் நடுங்க என்று சொல்லி விதையையும் இலவசமாக கொடுத்தாங்க. இந்த முறை அரை குறுக்கத்தில் கத்திரியை நட்டோம். கால் குறுக்கத்தில் கொஞ்சம் கூடுன இடத்தில் (37 சென்ட்) வெண்டியை நட்டோம். வெண்டி வயலில் வயலைச் சுற்றி இருக்கம் வரப்பு, உள்ளுக்குள் வாய்க்கால் வரப்பு என்று பரவலாக ஊடுபயிராக கொடி வகை காயான பீர்க்கனை விதைத்தோம். ‘வெண்டிக்க பாதிப்பு வந்துவிடுமோ என்று முதலில் பயமாகத்தான் இருந்தது. ஆனால், அப்படி ஒன்றும் நடக்கலை. சொல்லப்போனால், பீர்க்கன் நட்டதால் வழக்கத்தைவிட வெண்டி அதிகமாக காய்ச்சிருக்கு. 1,600 கிலோ வெண்டி கிடைக்கிறது. ஒரு கிலோ 20 ரூபாய் என்று விற்றிருக்கிறோம். இதுவரை 40 கிலோ பீர்க்கன் கிடைத்திருக்கு. கிலோ 20 ரூபாய் என்று விற்றுக்கொண்டிருக்கிறோம். இன்னும் பீர்க்கன் வந்துகிட்டு இருக்கு. அடுத்த முறை இன்னும் அதிக இடத்தில் கொடி வகைப் பயிர்களை ஊடுபயிராக செய்யப் போகிறோம். என்று நம்பிக்கையோடு சொன்னார்கள். முதலுக்கு மோசமில்லை! சின்ன அக்கிரமோசி கிராமத்தைச் சேர்ந்த பாலு, பருத்திக்கு ஊடுபயிராக வெண்டையை சாகுபடி செய்துள்ளார். வழக்கமாக பருத்தியை மட்டும்தான் சாகுபடி செய்வேன். வேளாண்மை தொழில்நுட்ப வல்லுநர் ஏகாம்பரம்தான், ஊடுபயிராக வெண்டியை நடுங்க என்று சொன்னார். ஆனால், பருத்தியே நெருக்கமாக இருக்கும். அதுக்கு இடையில் எப்படி வெண்டியை நடுவது என்று தயங்கினேன். சோதனை முயற்சியாக 30 சென்டில் ஊடுபயிராக வெண்டியை நடவு செய்தேன். 8 அடிக்கு 8 அடி சதுர பாத்தியெடுத்து வரிசைக்கு வரிசை இரண்டரை அடியும், செடிக்குச் செடி ஒன்றரை அடி இடைவெளி விட்டு பருத்தி நடுவோம். இரண்டு பருத்தி வரிசைக்கு இடையில் இருக்கும் இடை வெளியில் செடிக்கச் செடி இரண்டடி இடைவெளியில் வெண்டியை நட்டேன். வழக்கமாக

பருத்திக்கு செய்யும் பராமரிப்புகளை மட்டும்தான் செய்தேன். வெண்டிக்கு என்று தனியாக எதுவும் செய்யவில்லை. ஆனால் இரண்டும் போட்டி போட்டுட்டு அம்சமாக வளர்ந்திருக்கு. இன்னும் பருத்தி மகசூலுக்கு வரலை. அதற்குள் 1,000 கிலோ வெண்டி எடுத்துட்டேன். கிலோ 20 ரூபாய் என்ற விற்றதில் 20 ஆயிரம் ரூபாய் கிடைத்தது. இந்த 30 செண்ட் பருத்தியில் கூட சில சமயம் இந்த விலை கிடைக்காது. இப்போது, எது ஊடுபயிர்… எது முக்கிய பயிர்னே தெரியலை. ஒரே பயிரைப் செய்து ஏமாந்து போறதை விட, இப்படி கலப்புப் பயிர்களை செய்தால் பெரிதாக லாபம் வராட்டியும்.. முதலுக்கு மோசமிருக்காது என்றார்.
கலெக்டர் சொன்ன கலப்புப் பயிர் திட்டம்! ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளிடையே புதிய மாற்றத்தை ஏற்படுத்தி வரும் இந்த கலப்புப் பயிர் திட்டத்தைப் பற்றி நம்மிடம் பேசிய தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் இளங்கோவன், வறட்சியான இந்த மாவட்டத்தில் விவசாயிகள் சந்திக்கும் சவால்கள் அதிகம். இருப்பதை வைத்து ஜெயிக்கும் ராமநாதபுரம் விவசாயிகள் கெட்டிக்காரங்க.

தஞ்சாவூரில் தண்ணீர் இருந்தாலுமே நெல் சாகுபடிக்கு செய்வதற்குள்ளளே அந்தப்பகுதி விவசாயிகள் ரொம்பக் கஷ்டபடுவாங்க. ஆனால், எங்க மாவட்டத்தில் தண்ணீரே இல்லாமல், மழையை மட்டும் நம்பி, மானாவாரியாக 40 ஆயிரம் ஏக்கரில் புழுதி விதைப்பாக விதைத்து

நெல்லில் விளைய வைக்குறாங்க. அந்தளவுக்கு உழைப்புக்கு அஞ்சாத இந்த மக்களுக்கு பாசனத் தண்ணீர் இல்லாமல் போனதால், பல ஆயிரம் ஏக்கரில் சீமைக் கருவேல் முளைச்சு கிடக்கு. இதை மாதிரி மற்ற மாவட்ட விவசாயிகளைப் போல் ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளும் விவசாயத்தில் நல்ல வருமானம் பார்க்கணும் என்று கலெக்டர் ஆசைப்படுகிறார். அதற்காக அவர் சொன்ன யோசனைதான் 'கலப்புப் பயிர்' திட்டம். இரண்டு வட்டாரத்தை மட்டும் எடுத்து அதில் சோதனை முயற்சியாக சில செயல்பாடுகளைச் செய்யச் சொன்னார். அவர் சொன்னபடி செய்ததில் .. இப்போது நல்ல பலன். விவசாயிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இடையிலிருந்த இடைவெளி குறைந்திருக்கு. வழக்கமாக வருடத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் வருமானம் பார்க்கும் விவசாயிகள், இப்போது கூடுதலாக, 20 ஆயிரம் சம்பாதிக்க வழி கிடைத்திருக்கு. அதே மாதிரி இயற்கை விவசாயத்திற்கு விவசாயிகளை மாற்றும் முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கிறோம். கலெக்டர் உத்தரவுப்படி, இந்த நல்ல மாற்றத்தை மாவட்டம் முழுவதும் எடுத்து கொண்டு போகும் முயற்சியில் தீவிரமாக இருக்கிறோம் என்றார். இப்படியொரு முயற்சியை முன்னெடுக்கச் செய்து, வெற்றிக்கும் வித்திட்டிருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் நந்தகுமாரைத் தொடர்பு கொண்டபோது.. விவசாயிகளுக்கு நல்லது நடக்கணும் என்று நினைத்தேன். அதற்காக சில திட்டங்களை முன்னெடுத்தோம். இப்போது எல்லாம் நல்லபடியாக போயிட்டிருக்கு என்றார்.
முன்பு கருவேலங்காடு … இனி பசுமைச்சோலை… எட்டிவயல் பகுதியைச் சேர்ந்த முருகேசன், 40 ஏக்கர் கருவேல முள்காட்டை அழித்து, விவசாயம் செய்து வருகிறார். "முள்ளுக்காடாக இருந்த இடத்தை வாங்கி, மூன்று வருடம் ஆச்சு. போன முறை புழுதி விதைப்பில் நெல் விதைத்து, 400 மூட்டை (65 கிலோ) மகசூல் எடுத்தேன். இப்போது 6 ஏக்கர் நிலத்தில் தனிப்பயிராக உளுந்து, 30 ஏக்கரில் உளுந்தோடு ஊடுபயிராக பச்சைப் பயிறு விதைத்திருக்கிறேன்.
நிலத்திற்குள்ளேயே இரண்டு குட்டை வெட்டியிருக்கிறேன். கிணறு தோண்டியிருக்கிறேன். முழுக்க முழுக்க இயற்கை விவசாயம் செய்வதற்காக மண்புழு உரத்தொட்டி கட்டியிருக்கிறேன்.

ஆடு, மாடு, கோழி என்று ஒருங்கிணைந்தப் பண்ணையாக இதை மாற்றும் முயற்சியில் இறங்கியிருக்கிறேன். இன்னும் இரண்டு வருடத்தில் இதை பசுமைச் சோலையாக ஆக்கி காட்டுவதுதான் என்னுடைய லட்சியம் என்றார். விரைவில் தன்னிறைவு... கூடவே இயற்கை உறவு! திருவண்ணாமலை மாவட்டம் செஞ்சியைச் சேர்ந்த இயற்கை விவசாய வல்லுநர் ஏகாம்பரம். ராமநாகபுரம் பகுதி விவசாயிகளிடையே பணியாற்றுவதற்காக, மாவட்ட ஆட்சியர் நந்தகுமார் இவரை ஒப்பந்த ஊதிய அடிப்படையில் நியமித்துள்ளார். இப்பகுதியில் கலப்புப்பயிர்களை அறிமுகப்படுத்தியதில் இவருடைய பங்கு முக்கியமானது. நம்மிடம் பேசிய ஏகாம்பரம், ராமநாதபுரம் மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களை சீமைக்கருவேல் மரங்களைத்தான் ஆக்கிரமித்திருக்கிறது. இது, நிலத்தடி நீரை அதிகமாக உறிஞ்சுவதால் நிலத்தடி நீர்மட்டம் குறைவதுடன், மண்வளமும் கெட்டுப்போகிறது. அதனால் இந்த கருவேலமரங்களை அழித்துவிட்டு, விவசாய நிலங்களாக மாற்றும் முயற்சியில் கலெக்டர் ஈடுபட்டு இருக்காங்க. அதிக தண்ணீர் தேவைப்படும் கத்திரி, வெண்டி மாதிரியான காய்கறிகளை தனிப்பயிராக நடாமல், குறைந்த தண்ணீர் தேவைப்படும் கொடிவகை காய்கறிகளையும், ஊடுபயிர்களையும் அறிமுகப்படுத்த சொல்லியிருக்கிறார். அதற்கு தேவையான விதைகள் மற்றும் ஆலோசனைகளை இலவசமாக கொடுத்துக் கொண்டிருக்கிறோம். முதல் கட்டமாக நயினார் கோவில் ஒன்றியத்தில் 160 விவசாயிகளும் , பாகலூர் ஒன்றியத்தில் 130 விவசாயிகளும் நாங்க சொன்னதை ஆர்வமாக செய்த கூடுதல் வருமானம் பார்த்திருங்காங்க. அது, அவங்களுக்கு இவங்களை கொஞ்சம் கொஞ்சமாக இயற்கை விவசாயத்திற்கு கொண்டு வரப்போகிறோம். அதனுடன் கால்நடை வளர்ப்பு, ஒருங்கிணைந்த பண்ணையம் தொடர்பான பயிற்சிகளையும் கொடுத்து விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

இன்னும் கொஞ்ச வருடத்தில் இந்தப்பகுதி இயற்கை விவசாயிகள் நிறைந்த, விவசாயத்தில் தன்னிறைவு அடைந்த பகுதியாக இருக்கும். இதற்கான முழு காரணகர்த்தா கலெக்டர்தான் என்றார்.

ஒரே பண்டுதம் நான்கு வரும்படி.. நாம் சந்தித்து திரும்பிய சில நாட்களிலேயே நம்மைத் தொடர்பு கொண்ட பாண்டியூர் கோமதிநாதன், 30 கிலோ விதை வெங்காயம் நட்டேன். 70 நாளில் 283 கிலோ வெங்காயம் மகசூல் கிடைத்தது. கிலோ 30 ரூபாய் என்று விற்றதில் 8 ஆயிரத்து 490 ரூபாய் கிடைத்திருக்கு. 90 நாளில் 130 கிலோ உளுந்து கிடைத்திருக்கு. இதை விற்றால் எப்படியும் 9 ஆயிரம் ரூபாய் கிடைத்துவிடும். அவரைக்காய் இன்னும் காய்த்து கொண்டுதான் இருக்கும். இதுவரைக்கும் 80 கிலோ எடுத்திருக்கிறேன். கிலோ 20 ரூபாய் என்று விற்கிறேன். இன்னும் மூன்று மாதத்தில் எப்படியும் 150 கிலோ அளவுக்கு காய் கிடைத்துவிடும். மொத்தமாக இதன் மூலமாக 4 ஆயிரத்து 500 ரூபாய் கிடைக்கும். வாழையை மட்டும் நட்டால், கைக்காசைப் போட்டுத்தான் பண்டுதம் பார்க்கணும். ஆனால். இந்த முறை ஆறு மாதத்திலேயே 20 ஆயிரம் ரூபாய் அளவு வருமானம் கிடைத்திருக்கு. ரொம்ப சந்தோஷமாக இருக்கு. இதைப் பற்றி முன்னமே தெரியாமப் போச்சே என்ற கவலையாவும் இருக்கு. ஒரே தண்ணீர், ஒரே பண்டுதம் நான்கு வரும்படி. இதைக் கத்துக்கொடுத்த அதிகாரிகளுக்குத்தான் நன்றி என்றார்.

**தொடர்புக்கு**

முருகேசன், செல்போன் : 94434 65991

இளங்கோவன், செல்போன் :94430 13999

ஏகாம்பரம். செல்போன் :90959 74287

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 25.04.13** www.vikatan.com